# உயிர்ப்பின் காலத்தில் மூன்றாம் வாரம்

திருவழிப்பாட்டு ஆண்டு C (14-04-2013)

## திருப்பலி முன்னுரை:

இறை இயேசுவில் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) அன்புநிறை சகோதர்களே! சகோதரிகளே இறைபிரசன்னத்தில் மீண்டும் ஒரு புதிய வாரத்தைதுவங்க கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் உயிர்த்த இயேசுவின் திருநாமத்தில் அன்போடு அழைக்கின்றேன். உயிர்பின் காலத்தில் இந்த மூன்றாம் வாரத்தில் இறைப்பணியாற்ற அன்போடு தூண்டப் பெறுகிறோம். அதன் ஒருசில கூறுகளை இன்றைய திருப்பலி வாசகங்கள் நம்முன் வைக்கின்றன.

## உணவருந்த வாருங்கள் !

உயிர்த்த இயேசு தம் சீடரிடம் காட்டும் பாசமும், பரிவும் நம் உள்ளத்தைத் தொடுகின்றன. அவர்கள் தம்மைக் கைவிட்டு ஓடிவிட்டதையோ, தமது உயிர்ப்பை நம்ப மறுத்ததையோ, தங்களின் பழைய வாழ்க்கைக்கே மீண்டும் திரும்ப முடிவு செய்ததையோ அவர் பொருட்படுத்தவில்லை. மாறாக, தந்தை தம் பிள்ளைகள்மேல் பரிவு காட்டுவதுபோல இயேசு தம் சீடர்களுக்குப் பரிவு காட்டுகிறார்.

அவர்களுக்கு மீன்பாடு கிடைக்கவில்லை என்பதை அவர்களிடம் விசாரித்து அறியும்போதும், படகின் வலைப்பக்கத்தில் வலை வீசச்சொல்லி, பெரும் மீன்பாடு கிடைக்கச் செய்யும்போதும், களைப்போடும், பசியோடும் அவர்கள் கரைக்கு வரும்போது, அவர்களுக்கு உணவு தயாரித்து வைத்திருந்து, உணவருந்த வாருங்கள்" என்று அழைக்கும்போதும், உயிர்த்த இயேசுவின் பரிவை நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

இந்தப் பாஸ்காக் காலத்தில் உயிர்த்த இயேசுவின் பாசத்தை நாமும் அனுபவிப்போம். நமது கடந்த கால வாழ்வை, குறைகளை, பாவங்களை அவர் நினைவுகூராமல், நம்மைப் பரிவுடன் பராமரிக்கும் அவரது பேரன்பைப் போற்றி மகிழ்வோம். பெருமகிழ்ச்சியுடன் இத் திருப்பலியில் பங்கு பெறுவோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,**

உம் திருமகன் இயேசுவின் உயிர்ப்பை காணாமலே நம்பி ஏற்றுக்கொண்டிருக்கும் எங்கள் திருத்தந்தை, முதலாம் பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் தங்கள் நம்பிக்கையில் நிலைத்திருந்து, உமது சாட்சிகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**கடந்த காலக் கசப்பு அனுபவங்களை வென்ற வெற்றி வீரரான ஆண்டவரே,**

உம்மைப் போற்றுகிறேன். எனது முன்னாள் வாழ்வு, தவறுகள் அனைத்தையும் நீர் மறந்து, மன்னித்து, என்னைப் புதுப் படைப்பாக மாற்றுவதற்கும், உமது பாசம் நிறை கண்களால் என்னைப் புதுப் படைப்பாகக் காண்பதற்கும் உமக்கு நன்றி கூறுகிறேன். என் இதயத்தைப் புதிதாக மாற்றியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மேன்மைமிகு அரசராம் இறைவா,**

உலகெங்கும் வாழும் பிற சமயத்தினர் முன்னிலையில் உண்மையின் சாட்சிகளாக வாழ்ந்து, உமது அரசைக் கட்டியெழுப்ப கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் உதவ வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.

**உதவிசெய்ய அழைப்பவராம் இறைவா,**

ஏழ்மை, தனிமை, வன்முறை, நோய் போன்ற பல்வேறு பிரச்சனைகளால் அன்பை இழந்து வாடும் மக்களிடையே, உமது அன்பின் கருவிகளாக செயலாற்றும் வரத்தினை கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அன்புத் தந்தையே இறைவா,**

உமது வார்த்தையை தாம் விரும்பியவாறு விளக்கியுரைத்துக்கொண்டு விசுவாசிகளிடையே பிளவை ஏற்படுத்துவோர் அதிகமாகிவிட்ட இன்றைய நாட்களிலே நீரே உண்மையை வெளிப்படுத்தி உண்மை விசுவாசத்தை நோக்கி மக்களை வழிநடாத்தவும், பிளவுபட்டுக்கிடக்கும் அத்தனை விசுவாசிகளையும் ஒன்று சேர்த்து உமது தலைமைத்துவத்தின் கீழ் அவர்களை வைத்துக் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.